செ.வெ.எண்-04 நாள்-03.02.2017

# அரியலூர் மாவட்டத்தில் வளர்ச்சி துறையின் மூலம் நடைபெற்று வரும் தனி நபர் இல்லக் கழிப்பறை கட்டுமான பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு, ஆய்வு.

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஊராட்சி ஒன்றியம், வாரணவாசி ஊராட்சியில் ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் நடைபெற்று வரும் தனி நபர் இல்லக் கழிப்பறை கட்டுமான பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

**இவ்வாய்வின்போது, மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

அரியலூர் மாவட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கீழ் தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) திட்டத்தின் மூலம் 16,713 கழிப்பறைகளும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் மூலம் 22,842 கழிப்பறைகளும் மொத்தம் 2016-17-ம் ஆண்டிற்கு 39,561 தனிநபர் இல்லக்கழிப்பறைகள் கட்ட இலக்கீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் அரியலூர் மாவட்டத்திலுள்ள 6 ஊராட்சி ஒன்றியங்களிலும் இந்த நிதியாண்டில் இதுவரை 11431 தனிநபர் இல்லக்கழிப்பறைகள் கட்டும் பணிகள் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. திருமானூர் ஊராட்சி ஒன்றியத்தில் **வாரணவாசி கிராம ஊராட்சியில்** திறந்தவெளி மலம் கழித்தல் அற்ற (ODF), கிராம ஊராட்சியாக அறிவிக்கப்படவுள்ளதையொட்டி, தனிநபர் இல்லக்கழிப்பறை கட்டுமான பணிகளை பார்வையிட்டு, அனைத்து பணிகளும் விரைவாக முடித்திட ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்.

இவ்வாய்வின்போது, திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை திருமதி.யோகேஸ்வரி, உதவி இயக்குநர் ஊராட்சிகள் திருமதி.கங்காதாரணி, உதவி செயற்பொறியாளர் திரு.அருள்மொழி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.பிரபாகரன், திரு.ஜாகிர்உசேன் மற்றும் வளர்ச்சித்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.